<u>**ADM COURT, SANKARANKOVIL**</u>

**தேதி 11.09.2025**

**CC. 273/2024**

<u>**அ.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியபிரமாணம் செய்துவைக்கப்பட்டு 2ம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**</u>

நான் எதுவரை படித்துள்ளேன் என்றால் நான் டெக்ஸ்டைல் டெக்னாலஜி டிப்ளமோ படித்துள்ளேன். நான் முதல்விசாரணையில் கூறிய விபரங்களைத்தான் போலீசார் விசாரணையிலும் கூறினேன் என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் 'எதிரி செல்வக்குமார் என்பவரை மட்டும் எங்கள் ஏரியாவில் சுமார் 4 தடவைக்கு மேல் பார்த்திருக்கிறேன்' என்று கூறினேனா என்றால் கூறினேன். நான் முதல்விசாரணையில் கூறியுள்ள விபரமான 'எதிரி செல்வக்குமார் காரிலும் ஒருதடவை வந்திருக்கிறார்' ஒருமுறை நான் அவரிடம் எதற்காக இங்கு வந்திருக்கிறீர்கள் என்று கேட்டபோது ஆடு வாங்கவந்ததாக கூறினார்' என்பதை போலீசார் விசாரணையில் கூறியுள்ளேனா என்றால் கூறியுள்ளேன். அரசுதரப்பு பட்டியல் சாட்சி 2ஆன அரவிந்தன் எனது அண்ணன் மகன் என்றால் சரிதான். அ.சா.2 டேனியல் நான் வேலை பார்க்கும் கம்பெனியில் எனக்கு கீழ் வேலை பார்க்கும் நபரா என்றால் எனது கம்பெனியில் டேனியல் பணிபுரிகிறார். எனக்கு கீழ் பணிபுரியவில்லை. அரசுதரப்பு பட்டியல் சாட்சி 4ஆன மாரியம்மாள் யார் என்றால் மாரியம்மாள் என்பவரை எனக்கு தெரியாது. எனது வீட்டைச்சுற்றி வேறு குடியிருப்பு வீடுகள் உள்ளனவா என்றால் இல்லை. என்னிடம் காட்டப்படும் மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளவாறு எனது வீட்டுக்கு அருகாமையில் மாரிமுத்து வீடு, முப்பிடாதி வீடு மற்றும் ராம்குமார் வீடு உள்ளனவா என்றால் எனது வீட்டுக்கு மேற்குப்பக்கத்தில் 7 பிளாட்டுகள் தள்ளி ஒரு வீடு உள்ளது மற்றும் எனது வீட்டுக்கு கிழக்குப்பக்கத்தில் 3 பிளாட்டுகள் தள்ளி ஒரு வீடு உள்ளது. மேற்படி வீடுகளின் உரிமையாளர்கள் பெயர் எனக்கு தெரியாது. எஸ்என்ஆர் பள்ளிக்கூடம் மற்றும் பேருந்துநிறுத்தம் ஆகியவற்றை தாண்டித்தான் எனது வீட்டிற்கு செல்லவேண்டும் என்றால் சரிதான். பகல்நேரத்தில் மேற்படி பள்ளிக்கூடம் மற்றும் பேருந்துநிறுத்தத்தில் ஆட்கள் கூட்டம் நிறைய இருக்கும் என்றால் சரியல்ல. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் ரிலையன்ஸ் பல்க் சங்கரன்கோவில்–ராஜபாளையம் மெயின்ரோட்டில் அம்மாநகர் அருகில் இருந்தது

என்றால் சரிதான். மேற்படி ரிலையன்ஸ் பல்க்கில் சிசிடிவி கேமரா இருந்ததா என்றால் எனக்கு தெரியாது. சம்பவம் நடந்த சமயத்தில் ரிலையன்ஸ் பல்க் மற்றும் ஏவிகே பள்ளிக்கூடத்தில் பதிவு செய்யப்பட்டிருந்த சிசிடிவி கேமராவின் பதிவை போலீசார் பார்த்தனரா என்றால் எனக்கு தெரியாது. சாட்சி பின்பு தாமாக முன்வந்து போலீசார் எங்கள் ஏரியாவில் இருந்த சிசிடிவி கேமரா பதிவுகள் பற்றி விசாரணை செய்துகொண்டிருந்ததாக தன்னிடம் கூறினார்கள் என்று கூறினார். 17.04.2018 ம் தேதி மாலை 7 மணியளவில் நான் நீதிமன்றத்தின் முன்பு காவல்நிலையத்தில் சென்று திருட்டு சம்பவம் தொடர்பாக புகார் அளித்ததாக கூறினேனா என்றால் 17.04.2018 ம் தேதி மாலை 7 மணியளவில் திருட்டு சம்பவம் தொடர்பாக காவல்நிலையத்திற்கு போன் மூலம் தகவல் தெரிவித்தேன். 18.04.2018 ம் தேதி அதிகாலை 1 மணியளவில் காவல்நிலையம் சென்று புகார் மனு அளித்தேன். நான் புகார் மனு அளித்தபிறகு போலீசார் சம்பவ இடத்தை பார்வையிட்டு என்னை விசாரணை செய்து என்னிடம் வாக்குமூலம் பெற்றனர் என்றால் சரிதான். நான் புகார் மனு அளித்ததிலிருந்து எதிரி கைது செய்யப்பட்டது வரையிலான ஒரு வார காலத்திற்குள் எனது வீட்டில் மோப்பநாய்களை பயன்படுத்தி போலீசார் விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். என்னிடம் போலீசார் பதிவு செய்த வாக்குமூலத்தில் எனது வீட்டை மோப்பநாய்கள் பயன்படுத்தி போலீசார் விசாரணை செய்த விபரம் பற்றி கூறியுள்ளேனா என்றால் அது பற்றி என்னிடம் கேட்கவில்லை. அதனால் நான்கூறவில்லை. நான் புகார் மனு அளித்ததிலிருந்து எதிரி கைது செய்யப்பட்டது வரையிலான ஒரு வார காலத்திற்குள் எனது வீட்டில் கைரேகை நிபுணர்கள் வந்து கைரேகை தடயங்களை எடுத்தனரா என்றால் 17.04.2018 ம் தேதி அன்று இரவே கைரேகை நிபுணர்கள் வந்து தடயங்களை எடுத்துச்சென்றனர். மேற்படி கைரேகை நிபுணர்கள் தடயங்களை எடுத்துக்கொண்டிருந்தபோது அவர்களுடன் போலீசார் இருந்தனரா என்றால் இருந்தார்கள். கபோர்டில் பணம்வைத்திருந்த பை மற்றும் கபோர்டின் சாவி ஆகியவற்றை போலீசாரிடம் ஒப்படைத்தேனா என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. சம்பவம் நடந்த பிறகு எனது வீட்டில் உடைக்கப்பட்டிருந்த கதவு மற்றும் கபோர்டின் சாவி போன்ற பொருட்களை போலீசார் கைப்பற்றினரா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. களவுப்போனதாக சொல்லப்படும் 49–1/2 பவுன் எடையுள்ள நகைகளை

நான் வாங்கியதற்கான ரசீது ஏதும் போலீசாரிடம் அளித்தேனா என்றால் இல்லை. களப்போனதாக சொல்லப்படும் 5–1/2 லட்சம் ரூபாயை Denomination யை எனது புகார் மனுவில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. மேற்படி 5–1/2 லட்சம் ரூபாயை யாரிடமிருந்து நான் பெற்றேன் என்பது பற்றி போலீசார் விசாரித்தனரா என்றால் போலீசார் என்னிடம் விசாரித்தார்கள். நான் முதல்விசாரணையில் கூறியவாறு எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், செல்வக்குமாரை எனது ஏரியாவில் 4 தடவைக்கு மேல் பார்த்ததாக சொல்லியுள்ளதும், நான் அவரிடம் எதற்காக வந்தீர்கள் என்று ஒருமுறை கேட்டதற்கு அவர் என்னிடம் ஆடுவாங்க வந்ததாக சொல்லினார் என்று கூறியுள்ளதும் ஆகிய விபரங்கள் வழக்கிற்காக பொய்யாக என்னால் கூறப்பட்டவை என்றாலும், நான் முதல்விசாரணையில் கூறிய விபரங்கள் பொய்யானவை என்றாலும், நான் முன்னுக்கு பின் முரணாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
(In the Court of the Additional District Munsif, Sankarankovil )

| | |
|---|---|
| Calendar | --- |
| Miscellaneous | --- |
| Preliminary Register | : **CC 273/2024** |
| Deposition of Witness for | : PW 3 |
| Name | : அரவிந்தன் |
| Father's Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |
| Date | : 11.09.2025 |

Solemnly affirmed in accordance with provision of act 1873 on the day of 11th September 2025.

2 ம் **எதிரி ஆஜர். 1,3,4 எதிரிகள் ஆஜர் இல்லை. மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. 2 ம் எதிரி வழக்கறிஞர் ஆஜர்.**

**முதல்விசாரணை:**

நான் தற்போது குவளைக்கன்னியில் குடியிருந்து வருகிறேன். நான் தற்போது டிரைவராக வேலை செய்து வருகிறேன். இந்த வழக்கு சம்பவகாலத்தில் நான் முறம்பு பக்கம் உள்ள பாலிஸ் மில்லில் வேலை செய்துகொண்டிருந்தேன். அ.சா.1 பாலமுருகன் எனது சித்தப்பா. எஸ்என்ஆர் பள்ளிக்கு எதிரில் உள்ள அம்மா நகரில் அ.சா.1 க்கு சொந்தமான வீடு உள்ளது. அந்த வீட்டில் நான்தான் பெரும்பாலும் இருப்பேன். 17.04.2018 ம் தேதி நான் குவளைக்கன்னியிலிருந்து இரவுப்பணிக்காக கிளம்பிக்கொண்டிருந்தேன். மாலை சுமார் 6.30 மணியளவில் எனக்கு அ.சா.1 போன் மூலமாக தனது வீட்டின் கதவு உடைந்துகிடந்ததாகவும், தனக்கு வீட்டிற்குள் செல்ல பயமாக இருப்பதாகவும் கூறி என்னை வரச்சொன்னார். நான் உடனே கிளம்பி

அம்மாநகரில் உள்ள அ.சா.1 வீட்டிற்கு வந்து பார்த்தபோது வீட்டின் கேட்டின் பூட்டு உடைந்துகிடந்தது. வீட்டின் மெயின்கதவு உளி கம்பி கொண்டு நெம்பப்பட்டு அந்த கதவு உடைந்துகிடந்தது. உள்ளே சென்று பார்த்தபோது வீட்டின் பெட்ரூம் கதவு உடைந்திருந்தது. கபோர்டில் கிடந்த துணிகள் அனைத்தும் வெளியே கிடந்தன. அ.சா.1 யிடம் கேட்டபோது பையில் ரூபாய் 5 லட்சம் வரை பணம் இருந்ததாகவும், அந்த பையில் இருந்த பணத்தை காணவில்லை என்றும் கூறினார். அந்த பேக் மட்டும் பெட்டில் கிடந்தது. கபோர்டில் இருந்த நகைகள் அனைத்தையும் காணவில்லை. அதன்பின்னர் காவல்நிலையத்திற்கு தகவல் சொன்னேன். அதன்பின்னர் போலீசார் வந்து சோதனை செய்தார்கள். அதன்பின்னர் மறுநாள் காலை முதல்தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**2ம் எதிரி தரப்பில் குறுக்குவிசாரணை**

போலீசார் என்னை சம்பவம் தொடர்பாக விசாரித்தார்களா என்றால் நான் சம்பவம் நடந்த வீட்டில் இருப்பேனா என்பது குறித்தும், எனக்கும், அ.சா.1 க்கும் இடையில் உள்ள தொடர்பு குறித்தும் மட்டும் விசாரித்தார்கள். சம்பவம் தொடர்பாக வேறு எதுவும் விசாரிக்கவில்லை. சம்பவம் நடந்தது பற்றி எனது சித்தப்பாவான பாலமுருகன் சொல்லித்தான் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்த வீட்டிற்கு சென்றபோது எனதுசித்தப்பாவான அ.சா.1 வீட்டிற்குள் இருந்தாரா என்றால் அவர் வீட்டிற்கு வெளியில் நின்றுகொண்டிருந்தார். சம்பவம் நடந்த அ.சா.1 வீட்டிற்கு அருகாமையில் வேறு குடியிருப்பு வீடுகளோ, ஆள்நடமாட்டமோ உண்டு என்றால் சரிதான். எனது சித்தப்பாவின் வீட்டிற்கு செல்லும் வழியில் சங்கரன்கோவில்–ராஜபாளையம் ரோட்டில் உள்ள எஸ்என்ஆர் பள்ளிக்கூடம் மற்றும் பேருந்து நிறுத்தத்தில் ஆட்கள் கூட்டம் அதிகம் இருக்கும் என்றால் பள்ளிக்கூட நேரத்தில் கூட்டம் இருக்கும். எனது சித்தப்பா வீட்டிற்கு செல்லும் வழியில் ரிலையன்ஸ் பல்க் இருந்தது என்றால் சரிதான். மேற்படி ரிலையன்ஸ் பல்க்கில் சிசிடிவி கேமரா

இருந்தது என்றால் சிசிடிவி கேமரா இருந்தது. ஆனால் அந்த கேமரா செயல்பாட்டில் இருந்ததா என்று எனக்கு தெரியாது. நான் முதல்விசாரணையில் கூறிய விபரங்கள் பொய்யானவை என்றாலும், அ.சா.1 எனது சித்தப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**1,3 மற்றும் 4 எதிரிகள் தரப்பில் உள்ள வழக்கறிஞர் 2ம் எதிரி தரப்பு வழக்கறிஞரால் செய்யப்பட்ட குறுக்குவிசாரணையை அடாப்ட் செய்துகொள்வதாக தெரிவித்தார்.**

**மறுவிசாரணை இல்லை.**